தமிழ்நாடு அரசு

சுருக்கம்

சென்னை மாநகராடசி - மண்டலம் 1 வார்டு 5 - பூங்கா பெயர் மாற்றம் - கிராஸ் ரோடு பூங்காவை ''தந்தை பெரியார் பூங்கா'' என்று பெயர் மாற்றம் செய்திட சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை**

அரசாணை (இருபதாண்டு) எண்.95 நாள் 1.10.99

படிக்க

1. அரசாணை (நிலை) எண்.113. நகராட்சி நிர்வாகம் மறறும் குடிநீர் வழங்கல் துறை. நாள்30.6.98

2. சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை.3 கடித நிமஉது.ந.க. எண்.எஸ்சி3/435/98 நாள்6.7.99

ஆணை

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் சாலைகள் மற்றும் தெருக்கள், மருத்துவமனைகள், பூங்காங்கள் ஆகியவற்றிற்கு பெயர் மாற்றம் செய்வதற்கான அல்லது பெயர் சூட்டுவதற்கோ மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு அரசிற்கு முன்மொழிவினை அனுப்புவதை தவிர்க்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதத்தில் மண்டலம் 1இல் 23.10.97 அன்று நடந்த வார்டு குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான எண்.633/97ல் பரிந்துரை செய்துள்ளபடி புல எண்.3977/33 பகுதி 76 தண்டையார்பேட்டை கிராமம் மாநகராட்சி தனி நிலத்தில் அமைந்துள்ள கிராஸ்ரோடு பூங்காவன் பெயரை மாற்றி ''தந்தை பெரியார் பூங்கா'' எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டி அரசுக்கு பரிந்துரை செய்து கருத்துரு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு மாமன்றம் தனது தீர்மான எண்.411/98, நாள் 29.5.98ல் மேற்கண்ட பெயர் மாற்றத்திற்கு அனுமதி அளித்துள்ளது என்று தெரிவித்துள்ளார், மேலும் பெயர் மாற்றம் செய்தலை தவிர்க்குமாறு அரசு அறிவுறுத்தியிருப்பினும் இப்பெயர் மாற்றம் செய்திடல் அப்பகுதி மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் மாநகராட்சி இப்பெயர் மாற்றத்தை மீண்டும் வலியுறுத்தி அனுப்பி வைப்பதாகவும்

தெரிவித்து கிராஸ்ரோடு பூங்காவை ''தந்தை பெரியார் பூங்கா'' என பெயர் மாற்றம் செய்திட மேற்படி அரசாணையிலிருந்து விலக்களித்து தகுந்த ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3.சென்னை மாநகராட்சி ஆணையர் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்தபின் சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவையும் இது குறித்த சென்னை மாநகராட்சி மன்ற தீர்மானத்தையும் ஏற்று இதனை சிறப்பு நேர்வாக கருதி அரசாணை நிலை எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்30.6.98லிருந்து விலக்களித்து 1919 சென்னை மாநகராட்சி சட்டம், விதி எண்.228இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி மாநகராட்சிக்கு சொந்தமான புல எண்.3977/33 பகுதி எண்.76ல் அமைந்துள்ள கிராஸ்ரோடு பூங்காவின் பெயரை ''தந்தை பெரியார் பூங்கா'' என பெயர் மாற்றம் செய்திட சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது,

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. மாலதி,

அரசு செயலாளர்

பெறுநர்

ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை,3 (மேயர் மூலமாக)
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை.9
அரசுச் செயலர், பொதுத் துறை, சென்னை.9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை.9/ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை.9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வ.செ) துறை. சென்னை,9

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்